

நாகை மாவட்டம் தலைஞாயிறு ஊராட்சி ஒன்றியம் பன்னத்தெரு ஊராட்சி மாராச்சேரி கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறை சார்பில் மாற்றுத்திறனாளிக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர்களை உயர்கல்வித்துறை அமைச்சர் கோ.வி.செழியன் வழங்கினார். உடன் நாகை மாவட்டக் கழகச் செயலாளரும் தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், தலைஞாயிறு ஒன்றிய கழக செயலாளர் மகா குமார், தனித்துணை ஆட்சியர் சமூக பாதுகாப்பு திட்டம் .சு.கார்த்திகேயன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் அறிவுரையின்படி, வீட்டு வசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் மதுவிலக்கு ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் சு.முத்துசாமி , தென்மேற்கு பருவமழை தொடர்பாக கோவை மாநகராட்சி, மத்திய மண்டலம், அவிநாசி மேம்பாலம் அருகில் தேங்கும் மழைநீரை விரைவாக வெளியேற்றும் வகையில் தயார் நிலையில் வைக்கப்பட்டுள்ள கூடுதல் மின் மோட்டார்களை நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் மாவட்ட கண்காணிப்பு அலுவலர், தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழக நிர்வாக இயக்குநர் கிராந்திகுமார் பாடி, மாவட்ட ஆட்சித்தலைவர் பவன்குமார் க.கிரியப்பனவர், கோவை மாநகர் மாவட்டச் செயலாளர், சிங்காநல்லூர் சட்டமன்ற முன்னாள் உறுப்பினர் நா.கார்த்திக், கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொ.அ.ரவி, கோவை மாநகராட்சி மேயர் ரங்கநாயகி இராமச்சந்திரன், கோவை மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், தி.மு.க. தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஏர்போர்ட் ராஜேந்திரன், பெரிய கடைவீதி பகுதி 2 செயலாளர் வி.ஐ.பதுருதீன், வட்டக் கழகச் செயலாளர்கள் டவுன் பா.ஆனந்த், ஏ.அப்பாஸ் உள்பட கழக நிர்வாகிகள், அரசு அலுவலர்கள் பலர் உள்ளனர்.

## தஞ்சை வடக்கு மாவட்டம் முழுவதும்

# முத்தமிழறிஞர் கலைஞர் 102வது பிறந்த நாளை நல உதவிகள் வழங்கி கொண்டாடுவோம்!

## மாவட்டக் கழக செயற்குழுக் கூட்டத்தில் தீர்மானம்!

தஞ்சாவூர் , மே 28 -

தஞ்சை வடக்கு மாவட்ட செயற்குழு கூட்டத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்நாள் விழாவை சிறப்பாக கொண்டாடுவது, மதுரையில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் பொதுக்குழு உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்வது உள்ளிட்ட பல்வேறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

தஞ்சை வடக்கு மாவட்ட அவசர செயற்குழு கூட்டம் தஞ்சை வடக்கு மாவட்டக் கழக அலுவலகத்தில் மாவட்ட அவைத்தலைவர் க.நசீர் முகமது தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முன்னாள் எம்.பி, செ.இராமலிங்கம், சாக்கோட்டை க.அன்பழகன் எம்.எல்.ஏ, மாவட்டக் கழக நிர்வாகிகள் கோவி.அய்யாராசு, எஸ்.துரைமுருகன், எஸ்.நடராஜன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தஞ்சை வடக்கு மாவட்டக் கழகச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினருமான சு.கல்யாணசுந்தரம் கூட்டத்தின் தீர்மானங்களை விளக்கி சிறப்புரையாற்றினார்.

இக்கூட்டத்தில் மாநகரச் செயலாளர் சு.ப.தமிழழகன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் குட்டி இரா.தெட்சிணாமூர்த்தி, கும்பகோணம் தொகுதி பார்வையாளர் ரமேஷ் ராஜேந்திரன் உள்ளிட்ட ஒன்றிய, பகுதி, பேரூர் மற்றும் மாவட்ட சார்பு அணிகளின் அமைப்பாளர் கலந்துக்கொண்டனர்.

இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் வருமாறு :

கும்பகோணம் வலையப்பேட்டை பைபாஸ் சாலையில் கலைஞர் கோட்டத்தில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச்சிலைக்கு 03.06.2025 அன்று காலை சரியாக 8.00 மணியளவில் மலர் மாலை அணிவித்து புகழஞ்சலி செலுத்த வேண்டும் என்று மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக, கிளை கழக செயலாளர்கள் மற்றும் கழக தோழர்களை இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கழக தலைவரும் முத்தமிழ் அறிஞர் தலைவர் கலைஞர் அவர்கள் அரசியல் கலை இலக்கியம் சினிமா நாடகம், திரைக் கதை வசனம், பேச்சாற்றல், எழுத்தாற்றல் மற்றும் ஐந்து முறை முதலமைச்சராகவும் 80 ஆண்டு பொது வாழ்க்கைக்கு சொந்தக்காரராகவும் தான் போட்டியிட்ட அனைத்து தேர்தல்களிலும் வெற்றி பெற்ற கலைஞர் அவர்களின் பிறந்தநாள் வருகிற ஜுன் 3 பிறந்தநாள் வர இருப்பதால் மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழகங்கள் மற்றும் சார்பு அணிகளின் சார்பில் வழக்கம் போல் ஒரு மாதம் முழுவதும் ஏழை எளியோர்க்கு நலத்திட்ட உதவிகள் மாணவ மாணவிகளுக்கு நோட்டு புத்தகம் மற்றும் மருத்துவ முகாம்கள் முதியோர் இல்லங்களில் உணவு வழங்குதல், இளைஞர் அணி சார்பில் இரத்ததானம் வழங்குதல் மற்றும் கிளை கழகங்கள் தோறும் கழக கொடி ஏற்றி சிறப்பாக கொண்டாடுவது என்று தீர்மானிக்கிறது.

கழக தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் தலைமையில் தி.மு.க வரலாற்று சிறப்புமிக்க பொது க்குழுக் கூட்டம் 01.06.2025 ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் மதுரை, உத்தங்குடி, கலைஞர் திடலில் நடைபெற உள்ளது. மேற்கண்ட பொதுக்குழு உறுப்பினர்கள் கூட்டத்திற்கான மினிட் புத்தகம் பொதுக்குழு அரங்க நுழைவாயிலில் நமது மாவட்ட துணை செயலாளர் வசம் இருக்கும். காலை 9.00 மணிக்கு வருகை பதிவேட்டு மினிட் புத்தகத்தை மேடையில் ஒப்படைக்க தலைமை கழகம் வாயிலாக கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளதால், அந்த மினிட் புத்தகத்தில் மாவட்ட நிர்வாகிகள், செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக செயலாளர்கள் மற்றும் செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள் மற்றும் அணி அமைப்பாளர்கள் உள்ளிட்ட சிறப்பு அழைப்பு பெற்றவர்கள் தங்களுக்கு தலைமை கழகம் மூலம் அனுப்பப்பட்ட அழைப்பு கடிதத்தை தவறாமல் நமது மாவட்ட கழகத்திற்கு காலை 8.00 மணிக்கு வந்து கையொப்பமிட்டு, பேட்ஜ் ஆகியவற்றை பெற்றுக் கொள்வதுடன், கூட்டம் முடியும் வரை அனைவரும் கலந்துகொள்வது என்று இக்கூட்டம் தீர்மானிக்கிறது.

நாடு போற்றும் நான்காண்டு தொடரட்டும் இது பல்லாண்டு எல்லோர்க்கும் எல்லாம் என்று கழக தலைவர் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் நான்காண்டு திராவிட மாடல் ஆட்சியில் வியத்தகு மாற்றங்களையும் சாதனைகளையம் பொதுமக்களிடம் கொண்டு சேர்க்கும் வகையில் வெளியிடப்பட்டுள்ள கையேடுகளை மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், கிளை கழக செயலாளர்கள் வழங்க வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக் கொள்ளப்படுகிறது.

தஞ்சை வடக்கு மாவட்டத்திற்குட்பட்ட மாநகர, ஒன்றிய, பேரூர், பகுதி கழக சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்களை நியமிக்கும் வண்ணம் தகுதி உள்ள அனைவருக்கும் பொறுப்பு வழங்கும் பொருட்டு உடனடியாக மாநகர, ஒன்றிய, பேரூர் கழக செயலாளர்கள் சார்பு அணி நிர்வாகிகள் பட்டியலை வழங்குவது என்றும் மற்றும் மாற்று இயக்கத்திலிருந்து கழகத்தில் இணைய வருபவர்களை உடனடியாக கழக உறுப்பினராக இணைத்திடவும் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளப்படுகிறது.

கும்பகோணம் வாணி விலாச சபா சார்பில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102 வது பிறந்தநாள் 03.06.2024 முதல் 03.06.2025 வரை மாதம் ஒரு படம் என்று 12வது படமாக இளைஞன் படகாட்சியை திரையிடும் சபா செயலாளர் சு.கல்யாணசுந்தரம் MP அவர்களுக்கும், சபாவின் தலைவர் க. அன்பழகன் MLA அவர்களுக்கும் மற்றும் சபா நிர்வாகிகளுக்கும் நன்றியையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்வது என்றும் தொடர்ந்து மாதந்தோறும் நல்ல கருத்துக்களைக்கொண்ட படங்களை திரையிட வேண்டுமாய் இக்கூட்டத்தின் வாயிலாக கேட்டுக்கொள்ளபடுகிறது.

இவ்வாறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.




திருத்துறைப்பூண்டி ஒன்றியம் பாமணி ஊராட்சியில் நடைபெற்ற மக்களுடன் முதல்வர் முகாமில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் பேசினார்.உடன் மாவட்ட செயலாளர் பூண்டி.கே. கலைவாணன் எம்.எல்.ஏ, வை.செல்வராஜ் எம்.பி.,க.மாரிமுத்து, மாவட்ட ஆட்சியர் மோகனகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் பிரகாஷ்,மாவட்ட துணை செயலாளர் எம்.ராமகிருஷ்ணன், எஸ்.பி.பாஸ்கர்,சேது. முருகானந்தம் எம்.என். ராஜா, தாஜுதீன், நாகராஜன்,பாமணி பாலு மற்றும் அதிகாரிகள் உடன் உள்ளனர்.



மயிலாடுதுறை மாவட்ட ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் அறிமுக கூட்டம் மயிலாடுதுறை மாவட்ட கழகச் செயலாளர் நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ. தலைமையில் மயிலாடுதுறையில் விஜய் திருமண மண்டபத்தில் நடைபெற்றது. கூட்டத்தில் மாநில இளைஞர் அணி துணைச் செயலாளர், தாட்கோ தலைவர் என்.இளையராஜா, தகவல் தொழில்நுட்ப அணி மாநில துணைச் செயலாளர் மதுரைபாலா, சமூக வலைதள பயிற்சியாளர் விக்னேஷ்ஆனந்த், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் எம்.கே.மருது மற்றும் மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களின் 72 ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு கோவை ஆர்.எஸ்.புரம் பகுதி கழக செயலாளர் மாமன்ற உறுப்பினர் கார்த்திக் கே.செல்வராஜ் ஏற்பாட்டில் கோவை மாநகராட்சி 72 வது வட்டக் கழகம் மற்றும் வாசன் கண் மருத்துவமனை இணைந்து நடத்திய இலவச கண் பரிசோதனை முகாமை கோவை வடக்கு மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி துவக்கி வைத்தார். இதில் தொண்டாமுத்தூர் தொகுதி பொறுப்பாளர் வழக்கறிஞர் சு.ராதாகிருஷ்ணன், ஜெகதீஷ், நாசர் உள்பட நிர்வாகிகள், பாகநிலை முகவர்கள் பலர் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்டம், முத்துப்பேட்டையில் தமிழ்நாடு முதல்வர் அவர்களால் காணொளி வாயிலாக திறப்பு விழா கண்ட அரசு கல்லூரியில் சேர்ந்த மாணவ மாணவிகளை மாவட்டச் செயலாளர் பூண்டி கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வை.செல்வராஜ் எம்.பி., க.மாரிமுத்து எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் மோகனசந்திரன் ஆகியோர் வரவேற்று வாழ்த்தினர். உடன் பேரூர் செயலாளர் எம்.எஸ்.கார்த்திக், நகர்மன்ற தலைவர் மும்தாஜ் நவாஸ்கான், தொகுதி தேர்தல் பொறுப்பாளர் சௌமியன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் ஆர்.எஸ்.பாண்டியன், ஒன்றிய செயலாளர்கள் இரா.மனோகரன், வீ.எஸ்.ஆர்.தேவதாஸ், பால.ஞானவேல், ப.பிரகாஷ் உள்ளிட்டோர் இருந்தனர்.

## அண்ணாகிராமம் ஒன்றியம் -

# மு.இராமமூர்த்தி இல்லத் திருமண விழா!

## அமைச்சர்கள் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் – சி.வி.கணேசன் பங்கேற்பு!

கடலூர், மே 28 -

கடலூர் மேற்கு மாவட்டம் அண்ணா கிராமம் ஒன்றியம் என திரிமங்கலம் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் மு.இராமமூர்த்தி கௌரி ஆகியோரின் மகன் இரா. தமிழரசன் கு.பிரபாவதி ஆகியோரின் திருமணம் இன்று (28.05.2025 - புதன்கிழமை) காலை 6:மணி முதல் 7:30 மணிக்குள் கடலூர் மெயின் ரோடு பண்ருட்டியில் உள்ள சிவபார்வதி மஹாலில் நடைபெறுகிறது.

இத்திருமணத்தில் வேளாண்மை - உழவர் நலத்துறை அமைச்சர் கழக உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் கடலூர் கிழக்கு மாவட்டக் கழக செயலாளர் எம். ஆர்.கே. பன்னீர்செல்வம், தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் கடலூர் மேற்கு மாவட்டக் கழக செயலாளர் அமைச்சர் சி.வி. கணேசன் ஆகியோர் தலைமை வகிக்கின்றனர்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் அண்ணா கிராமம் ஒன்றிய கழக செயலாளர் வி.கே. வெங்கட்ராமன், தலைமை பொதுக் குழு உறுப்பினர் முன்னாள் ஒன்றிய செயலாளர் அண்ணா கிராமம் முரசொலி முகவர் என்.பலராமன் முன்னிலை வகிக்கின்றனர்.

திருமணத்தில் கடலூர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர்.எம்.கே. விஷ்ணு பிரசாத், நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராசேந்திரன், பண்ருட்டி சட்டமன்ற உறுப்பினர் தி. வேல்முருகன் மாவட்ட அவை தலைவர் டாக்டர். கொ. நந்தகோபாலகிருஷ்ணன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் செ. புஷ்பராஜ், வி.சி.சண்முகம் பண்ருட்டி நகர மன்ற தலைவர் நகர கழக செயலாளர் கே.இராஜேந்திரன் மாவட்ட துணை செயலாளர்கள் ஆர்.எஸ். எம். தணிகை செல்வம், ஆனந்தி சரவணன் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் எம். எஸ். கணேஷ்குமார், நகர மன்ற துணைத் தலைவர் ஏ.சிவா,

மாவட்ட கலை இலக்கிய பகுத்தறிவு பேரவை அமைப்பாளர் வழக்கறிஞர் ஏ. மதனகுரு, ஜி.கே. கதிர்காமல், மாவட்ட



இளைஞர் அணி துணை அமைப்பாளர்கள் எஸ். துரைராஜ் ஆ.சதாம், வி. திருவேங்கடம், பி.மணிவண்ணன், ஜெயந்தி ராதாகிருஷ்ணன், ஆர். சுந்தரவடிவேல் வி.ஜெயமூர்த்தி, எஸ்.சடாச்சரம், டி. கலியமூர்த்தி, மற்றும் பா.வை. எழில்செல்வம், ஏ.கலில்லு ரகுமான், டி.ஜெய மூர்த்தி, டி. வாசுகி, ஜெ. செந்தில்குமார், எஸ்.சதாசிவம்,

எம்.முரளி முத்துசாமி, வி. சிவநேசன், ம.த. ஏசுதாஸ்,டி. நாராயணன், பி. எம்.முத்துசங்கர், எஸ்.வி. ராமர் எம்.ஆறுமுகம், உமையாள் ஆறுமுகம், ஸ்ரீதர், ராமச்சந்திரன், ராஜ சேகர், புருஷோத்தமன், பூபதி, பாண்டியன், சக்கரபாணி, ராகவன், ஞானவேல், மணிகண்டன், ராஜசேகர், ரமேஷ், லட்சுமி காந்தன், டி.எஸ். பாலகிருஷ்ணன், ரஞ்சித், சுபாஷ், தினகரன், அலெக்ஸ், பார்வதம் வெங்கட்ராமன், குமரகுரு, அங்கயற்கன்னி முருகன், ராஜாராமன், தியாகராஜன், சதாசிவம், குமுதவல்லி தண்டபாணி, கோவிந்தராஜ், சுந்தரராமன், வேணுகோபால், கோபாலகிருஷ்ணன், மகாலட்சுமி வெங்கடேசன், ஆகியோர் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகின்றனர்.

சி.தங்கராசு, எம். மணிவேல் (எ) வெங்கடேசன், இரா.அன்பரசன் ஆகியோர் நன்றியுரை ஆற்றுகின்றனர்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு மதிப்பீட்டுக் குழு (2024–26) மாவட்ட திட்டப் பணிகள் தொடர்பான ஆய்வுக் கூட்டம் தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழுத்தலைவர் / வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் தலைமையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு முதன்மைச் செயலாளர் கி.சீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் ., மதிப்பீட்டுக் குழு சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன் ,சேவூர் எஸ்.இராமச்சந்திரன் , எஸ்.எஸ்.பாலாஜி , எஸ்.பி.வெங்கடேசன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. உடன், பர்கூர் சட்டமன்ற உறுப்பினர் தே.மதியழகன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பெ.தங்கதுரை, மாவட்ட வருவாய் அலுவலர் அ.சாதனைக்குறள் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழு (2024–2026), கிருஷ்ணகிரி மாவட்டம், ஓசூர், மோரனப்பள்ளி கிராமத்தில், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை சார்பாக, ரூ.30 கோடி மதிப்பில் கட்டப்பட்டு வரும் புதிய பேருந்து நிலைய கட்டுமானப் பணிகளை, தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை, மதிப்பீட்டுக் குழுத்தலைவர் / வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.காந்திராஜன் தலைமையில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை அரசு முதன்மைச் செயலாளர் கி.சீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் ச.தினேஷ் குமார் , ஆகியோர் முன்னிலையில், மதிப்பீட்டுக் குழு சட்டமன்ற உறுப்பினர்கள் தா.உதயசூரியன் , சேவூர் எஸ்.இராமச்சந்திரன் , எஸ்.எஸ்.பாலாஜி (திருப்போரூர்), எஸ்.பி.வெங்கடேசன் ஆகியோர் ஆய்வு மேற்கொண்டனர். உடன், ஓசூர் சட்டமன்ற உறுப்பினர் ஒய்.பிரகாஷ், ஓசூர் மாநகராட்சி மேயர் எஸ்.ஏ.சத்யா, மாநகராட்சி ஆணையாளர் திருமதி.மாரிசெல்வி உள்ளிட்ட பலர் உள்ளனர்.